

திருச்சி உறையூரில் 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற பெயரில் நடைபெற்ற தி.மு.க. பொதுக்கூட்டத்தில் தலைமை கழக செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ். இளங்கோவன் உரையாற்றினார். நிகழ்ச்சியில் கழக முதன்மைச்செயலாளரும் மண்டல பொறுப்பாளரும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு மற்றும் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாநகராட்சி மேயர் மு.அன்பழகன் முன்னாள் எம்.எல்.ஏ. அன்பில் பெரியசாமி குத்தாலம் அன்பழகன், மாவட்ட துணை செயலாளர் முத்து செல்வம் விஜயா ஜெயராஜ் கருணாநிதி, டோல்கேட் சுப்ரமணி, காஜாமலை, விஜய், பகுதி செயலாளர்கள் இளங்கோ, மோகன்தாஸ், கனகராஜ், நாகராஜ், கலைச்செல்வி, திருநாவுக்கரசு, ஹரிஹரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



இந்து சமய அறநிலையத் துறை சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ராஜா அண்ணாமலைபுரம் கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் திருக்கோயில்கள் சார்பில் 32 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார். அதனை தொடர்ந்து ஈரோடு மண்டலத்தில் பெருந்துறை பேருந்து நிலையம் அருகில் உள்ள சோளீஸ்வரர் திருக்கோவிலில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு கிழக்கு வி.சி.சந்திரகுமார், மேயர் சு.நாகரத்தினம், துணை மேயர் வி.செல்வராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### திருச்சி வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.ஆர்.கார்த்திக் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு திருச்சி வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 07.07.2025 | முசிறி நகரம் | மேல சாலியத் தெரு, முசிறி. | சீனி விடுதலை அரசு ந.காருண்யா |
| 2 | | முசிறி நகரம் | கீழ சந்தப்பாளையம் | திருச்சி ராதாகிருஷ்ணன் அ.சுஹாசினி |
| 3 | 08.07.2025 | தொட்டியம் பேரூர் | வாணப்பட்டறை | துரை பாண்டியன் ரா.சிந்துநதி |
| 4 | | தொட்டியம் கிழக்கு ஒன்றியம் | மணமேடு ஊராட்சி | ரெங்கநாதபுரம் பாஸ்கர் மு.ராமமூர்த்தி |
| 5 | | தாத்தையங்கார்பேட்டை மேற்கு ஒன்றியம் | நீலியாம்பட்டி ஊராட்சி | பவித்ரம் கண்ணன் ஐ.பாலகணபதி |
| 6 | 10.07.2025 | சா.கண்ணனூர் பேரூர் | சமயபுரம் கடைவீதி | ரெங்கநாதபுரம் பாஸ்கர் ர.சிந்துநதி |
| 7 | | தாத்தையங்கார்பேட்டை பேரூர் | கலைஞர் திடல், கடைவீதி. | துரை பாண்டியன் அ.விஜலெட்சுமி |
| 8 | | மண்ணச்சநல்லூர் கிழக்கு ஒன்றியம் | தத்தமங்கலம் ஊராட்சி, தேவிமங்கலம். | நாமக்கல் ராஜகோபால் ரா.கனிமொழி |
| 9 | | முசிறி மேற்கு ஒன்றியம் | கோமங்கலம் ஊராட்சி | திருச்சி ராதாகிருஷ்ணன் ந.காருண்யா |
| 10 | 11.07.2025 | மேட்டுப்பாளையம் பேரூர் | பேருந்து நிலையம் அருகில் | ரெங்கநாதபுரம் பாஸ்கர் அ.விஜலெட்சுமி |
| 11 | | தாத்தையங்கார்பேட்டை கிழக்கு ஒன்றியம் | சிட்லரை ஊராட்சி | நாமக்கல் ராஜகோபால் ர.சிந்துநதி |
| 12 | | துறையூர் நகரம் | வடக்குத்தெரு, நான்கு சாலை. | ரெங்கநாதபுரம் பாஸ்கர் ந.காருண்யா |
| 13 | 12.07.2025 | மண்ணச்சநல்லூர் பேரூர் | எதுமலை பிரிவு சாலை | திருச்சி ராதாகிருஷ்ணன் அ.விஜயலெட்சுமி |
| 14 | | மண்ணச்சநல்லூர் மத்திய ஒன்றியம் | மாரியம்மன் கோயில் அருகில், வாழையூர் ஊராட்சி. | பவித்ரம் கண்ணன் த.குமரவேல் |
| 15 | | மண்ணச்சநல்லூர் மேற்கு ஒன்றியம் | திருப்பைஞ்ஞீலி ஊராட்சி கடைவீதி | மணப்பாறை காசிராஜன் ஐ.பாலகணபதி |
| 16 | | துறையூர் கிழக்கு ஒன்றியம் | பேருந்து நிலையம் அருகில், குன்னுப்பட்டி. | திருச்சி ராதாகிருஷ்ணன் ந.காருண்யா |
| 17 | 15.07.2025 | துறையூர் மத்திய ஒன்றியம் | பேருந்து நிலையம், கோணப்பாதை. | துரை பாண்டியன் ந.காருண்யா |
| 18 | | காட்டுப்புதூர் பேரூர் | பேருந்து நிலையம் அருகில், காட்டுப்புத்தூர். | நாமக்கல் ராஜகோபால் சை.சேக் அலிமாஸ் அலி |
| 19 | | தொட்டியம் மேற்கு ஒன்றியம் | மேய்க்கல் நாயக்கன்பட்டி கடைவீதி | திருச்சி ராதாகிருஷ்ணன் த.குமரவேல் |
| 20 | 16.07.2025 | உப்பிலியபுரம் வடக்கு ஒன்றியம் | நாகநல்லூர் ஊராட்சி | மு.விஜய ரெத்தினம் ரா.சிந்துநதி |
| 21 | | உப்பிலியபுரம் பேரூர் | ஈச்சம்பட்டி | ரெங்கநாதபுரம் பாஸ்கர் ந.காருண்யா |
| 22 | 17.07.2025 | துறையூர் மேற்கு ஒன்றியம் | பேருந்து நிலையம் அருகில், திருமானூர். | துரை பாண்டியன் சை.சேக் அலிமாஸ் அலி |
| 23 | 20.07.2025 | உப்பிலியபுரம் தெற்கு ஒன்றியம் | பச்சைபெருமாள்பட்டி ஊராட்சி, நெட்டவேலம்பட்டி. | துரை பாண்டியன் அ.விஜயலட்சுமி |
| 24 | | பாலகிருஷ்ணம்பட்டி பேரூர் | பி.மேட்டூர் | மணப்பாறை காசி ராஜன் ரா.சிந்துநதி |
| 25 | | முசிறி கிழக்கு ஒன்றியம் | கடைவீதி, கரட்டாம்பட்டி. | சீனி விடுதலை அரசு ப.வெங்கடேஷ் |

திருச்சி

நாள் : 02.07.2025

கலைஞர் 100 1924 - 2023



பா.ஜ.க.வை விட்டு வெளியேற அ.தி.மு.க.விற்கு முதலில் தைரியம் வரட்டும்!

# கொத்தடிமைகளைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை!

## புதுக்கோட்டையில் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!



புதுக்கோட்டை, ஜூலை 4-

புதுக்கோட்டையில் உள்ள அவருடைய இல்லத்தில் செய்தியாளர்களை இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி மற்றும் மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் ஆகியோர் செய்தியாளர்களை சந்தித்தனர்

அப்போது அமைச்சர் எஸ்.ரகுபதி பேசுகையில்,

ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தின் கீழ் தி.மு.க.வைச் சேர்ந்த ஒவ்வொரு அணியினரும் வீடு வீடாகச் சென்று எதற்காக நாம் ஒன்றிணைக்க வேண்டும் மத்திய அரசு நம்ம தமிழகத்தை எவ்வாறு வஞ்சிக்கிறது நிதியை தர மறுக்கிறது கீழடி விவகாரத்தையும் தமிழர்களின் கலாச்சாரம் தொன்மையை மத்திய அரசு புறக்கணிக்கிறது என்பதையும் எடுத்துக் கூறி அனைவரையும் ஒன்றிணைப்பதற்காக ஓரணியில் தமிழ்நாடு என்று இயக்கம் இன்று முதல் தொடங்கி 45 நாட்களுக்கு நடைபெற உள்ளது இதில் நாங்கள் அனைத்துத் தரப்பு பொது மக்களையும் மட்டுமல்லாமல் அ.தி.மு.க., பா.ஜ.க., தே.மு.தி.க., பா.ம.க. உள்ளிட்ட அனைத்து அரசியல் கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் வீடுகளுக்கும் உறுப்பினர்கள் வீடுகளுக்குச் சென்று அவர்களையும் இந்தத் திட்டத்தின் நோக்கத்தை குறித்து எடுத்துரைப்போம் அவர்களுக்கு இந்த நோக்கம் பிடித்து இருந்தால் தி.மு.க.வில் இணையலாம்.

ஆனால் யாரையும் நாங்கள் கட்டாயப்படுத்த மாட்டோம். இந்த இயக்கமானது திமுகவின் பிரச்சார இயக்கம் அல்ல. தமிழ்நாட்டிற்கான பிரச்சார இயக்கம் தமிழகத்தின் முழக்கம் தமிழன் தன்மானத்தை மானத்தை கலாச்சார பண்பாடு ஆகியவற்றை இழந்து விடக்கூடாது என்பதற்கான முழக்கம் தான் இது.

இதில் பிடித்தவர்கள் இணையலாம். பிடிக்காதவர்களை நாங்கள் கட்டாயப்படுத்தி இதில் இணைக்க மாட்டோம் என்றைக்கும் நாங்கள் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை எதிரிகளே இல்லை என்று நாங்கள் சொல்வதில்லை. எதிரிகள் உள்ளனர்.

ஆனால் இங்கு எதிரிகளுக்கு தைரியம் இல்லை என்று தான் கூறுகிறோம்

அந்த எதிரிகளை வெல்லக்கூடிய ஆற்றல் எங்களுக்கு உள்ளது

அஜித் குமார் உயிரிழப்பு விவகாரத்தில் தப்பு செய்தவர்கள் யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும், யாரையும் காப்பாற்றப்பட வேண்டிய அவசியம் தமிழ்நாடு அரசுக்கு இல்லை, இதேபோன்று. தான் அண்ணா பல்கலைக் கழக விவகாரத்தில் விமர்சன ங்களை முன் வைத்தார்கள். ஆனால் அந்த வழக்கில் ஆறு மாத காலத்திற்குள் குற்ற வாளிக்கு தண்டனைப் பெற்று தந்தோம். அதேபோல் திருப்புவனம் அஜித்குமார் வழக்கில் தப்பு செய்தவர்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுத்து நீதிமன்றம் சிறந்த அரசு என்று சொல்லும் அளவிற்கு செயல்படும்.

திருப்புவனம் சம்பவம் துரதிஷ்டவசமானது, இதில் காவல்துறை எந்த அளவுக்கு பொறுப்பு என்பது விசாரணையில் தான் தெரியும்.

பா.ஜ.க.வை விட்டு வெளியேற அ.தி.மு.க.விற்கு முதலில் தைரியம் வரட்டும், அத்தைக்கு மீசை முளைக்கட்டும் சித்தப்பாவாக வரட்டும் அதற்குப் பிறகு பார்ப்போம் அவர்கள் சொல்வதைக் கேட்போம், எங்களுக்கு கொத்தடிமைகளைப் பற்றி கவலையில்லை.

பா.ஜ.க. கூறும் ஒரே நாடு ஒரே தேர்தல் ஒரே ரேஷன் கார்டு என்பது போன்ற திட்டம் இல்ல இந்த இயக்கம் பிஜேபி கொண்டு வருவது சுயநலமான ஒன்று அதில் பொது நலம் கிடையாது.

இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் பொதுவான கலாச்சாரம் பொதுவான மொழி என்பது கிடையாது.ஒவ்வொன்றிலும் நாம் வேறுபட்டுள்ளோம்.

ஆனால் வேற்றுமையில் ஒற்றுமை இதுதான் இந்தியா தமிழருடைய நாகரிகம் நமக்கு சொந்தமானது தமிழருடைய இனம் நம்முடைய இனம் தமிழ் மொழி நம் மொழி இவை எல்லாம் நமக்கு சொந்தமானவை இதை முன்னெடுத்து தான் இந்த இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. தற்போது லாக்கப் டெத் நடந்தால் குற்றவாளிகள் உடனடியாக கைது செய்யப்படுகிறார்கள். சில சம்பவங்களில் அவர்கள் உயிரிழக்க நேரிடுகிறது அதை நாங்கள் இல்லை என்று கூறவில்லை

அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் நடைபெற்ற சாத்தான் குளம் போன்ற வழக்குகளில் நீதிமன்றத்திற்கு சென்று அவர்கள் உயிரோடு உள்ளாரா இல்லையா எங்கு உள்ளனர் என்பது குறித்து ஆட்கொணர்வு மனு அளித்து அதன் பின்னர் அந்த வழக்கு நடைபெற்று வருகிறது ஆனால் இந்த சம்பவத்தில் அப்படி இல்லை

தமிழக அரசு இது போன்ற வழக்குகளில் முறையாக கையாளாகாமல் நடவடிக்கை எடுக்கவில்லை என்று உயர் நீதிமன்றம் தனது கண்டனத்தை பதிவு செய்துள்ளது குறித்த கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர் உயர்நீதிமன்ற விமர்சனத்திற்கு நான் பதில் அளிக்க விரும்பவில்லை

தவறு செய்யும் யாரையும் நாங்கள் காப்பாற்றவில்லை. அது காவல்துறையாக இருந்தாலும் சரி அவர்கள் சட்டத்தின் முன்னால் தண்டிக்கப்படுவார்கள்

ஆனால் அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் அவ்வாறு அவர்கள் கூறவில்லை. பிரேத பரிசோதனை அறிக்கை அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கையை அரசு எடுக்கும். ஆனால் நம்முடைய காவல் துறையை போன்று சிறப்பாக செயல்படக்கூடிய காவல்துறை எங்கும் இல்லை. ஒருவர் நகையை காணவில்லை என்று காவல் துறையிடம் கூறுகிறார். இவரிடம் தான் நகை உள்ளது என்றும் கூறுகிறார்.

அதன் அடிப்படையில் சந்தேகத்தின் அடிப்படையில் அவரை அழைத்து காவல்துறையினர் விசாரணை செய்கின்றனர். அங்கு சில அசம்பாவித சம்பவங்கள் ஏற்படுகிறது உயிரிழப்பும் ஏற்படுகிறது. இந்த வழக்கை பொறுத்தவரை ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளுக்கு தொடர்பு உள்ளதாக கூறப்படுகிறது என்ற கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருந்தாலும் சரி ஐ.பி.எஸ். அதிகாரிகளாக இருந்தாலும் சரி இந்த வழக்கில் யாரையும் நாங்கள் விட்டு வைக்க போவது கிடையாது. அவர்கள் சம்பந்தப்பட்டிருந்தால் அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்

இந்த வழக்கை நீர்த்துப் போவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக கூறும் குற்றச்சாட்டை அமைச்சர் மறுத்தார். எங்களுக்கு அது அவசியம் இல்லை என்று தெரிவித்தார்.

இதேபோன்று தான் அண்ணா பல்கலைக்கழக வழக்கிலும் விசாரணை நீர்த்துப்போகும் என்று கூறினார்கள். ஆனால் இரண்டு மாத காலத்திற்குள் விசாரணை முடிந்து தண்டனை பெற்றுக் கொடுத்து விட்டோம்

இதே போல் இந்த வழக்கையும் ஐந்து அல்லது ஆறு மாதத்திற்குள் உரிய தண்டனையை பெற்றுத் தருவோம்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## எம். கிருஷ்ணன்

ஜூலை 4 (2022)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக்கொண்டு பணியாற்றியவர்.

மாதவரத்தில் நாற்பது ஆண்டுகள் வட்டச் செயலாளராகவும், மாவட்ட பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் போன்ற பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.